# 28 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பேரறிஞர் அண்ணாவின்
பெருமைமிகு மாணவன்...
முத்தமிழறிஞர் கலைஞரின்
விசுவாசமிகு தம்பி...
கழகத்தலைவர் தளபதியின்
பாசமிகு தமையன்...
நீங்கள் திராவிடம் செதுக்கிய கல்வெட்டு;
பாச நினைவோடு வாழ்கிறோம் - உமை விட்டு!



தோற்றம்: 11-05-1937 மறைவு: 14-11-1997

**திரு. என். வி. என். சோமு**
முன்னாள் அமைப்புச் செயலாளர், தி.மு.க.,
முன்னாள் மத்திய பாதுகாப்புத்துறை
இணை அமைச்சர்

நீங்கா நினைவுகளுடன் அன்பு மகள்
**டாக்டர். கனிமொழி என்.வி.என். சோமு**
M.B.B.S. M.S. (OBST. & GYNAC.)
மாநிலங்களவை உறுப்பினர்,
மாநில மருத்துவ அணித் தலைவர்,
செய்தி தொடர்பாளர், தி.மு.க.

---

## 29-வது ஆண்டு நினைவு அஞ்சலி

புதுக்கோட்டை
**அ.பெரியண்ணன்** Ex.MLA
முன்னாள் அரசு கொறடா, மாவட்ட கழக செயலாளர்



தோற்றம் : 20.11.1931 ❖ மறைவு : 15.11.1996

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்...
தலைவர் **கலைஞர்** நல்லாசியுடன்,
**தலைவர் தளபதி** தலைமையில்...
சின்னவர் **உதயநிதி ஸ்டாலின்** வழி நின்று பணியாற்றுவோம்...

இவண்:
**பெரியண்ணன் அரசு** M.Sc.,Ex.MLA.,
EX.மாவட்ட கழக செயலாளர்

முல்லை, புதுகை.

---

# தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!



தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.எம்.மதியழகன் முன்னிலையில் நாளை (16.11.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணி அளவில் கலைஞர் அரங்கம், தூத்துக்குடியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுபடி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1. மாநில இளைஞர் அணி செயலாளர், தமிழக துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் விழா
2. SIR (சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு) - குறித்து.
3.கழக வளர்ச்சிப் பணி

**அமைச்சர் பி.கீதாஜீவன்**
செயலாளர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க.

---



பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 137வது பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று (14.11.2025) சென்னை கிண்டி கத்திப்பாரா சந்திப்பில் அமைந்துள்ள, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர் பாலு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.எம். அசன் மௌலானா. எஸ்.ஆர். ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் (பொறுப்பு) திருமதி வே. அமுதவல்லி, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் (செய்தி) ச.செல்வராஜ் உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.